# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

நகர் ஊரமைப்புத்துறை
மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி,
உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொ)அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்- திரு. அ.விஜயன், பி.இ.,

ந.க.எண்.3484/2021/மதி2. நாள்27.12.2021.

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - மதுரை மாவட்டம் - மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் - திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம்/வட்டம்- தனக்கன்குளம் கிராமம் - சர்வே எண்.38/3A2B-ல் 0.50ஏக்கர் (அ) 2024.00ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் திட்ட அனுமதி - வழங்குதல் – குறித்து.

பார்வை:

1) மனுதாரர் திரு.M.அருண்குமார், அவர்களின் கடிதம், நாள்.15.09.2021,25.11.2021,08.12.2021 (பதிவு எண்.202100701013471, நாள்.02.07.2021).
2) உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் கடிதம் ந.க.எண்.3484/2021/மதி2, நாள்.16.11.2021.
3) அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-31.01.2020.
4) மதுரை உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண்.130/2020, நாள்.29.09.2020.
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-4367/2017பிஏ-2, நாள்-06.11.2019 மற்றும் 05.02.2020.
6) அரசு கடிதம் எண்.19113/நவ 4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்.30.08.2017.
7) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-13686/2017எல்ஏ-2, நாள்-08.09.2017.
8) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-12201/2017சிபி, நாள்-28.09.2017.
9) மனுதாரர் திரு.M.அருண்குமார், மதுரை என்பவரிடமிருந்து தானப்பத்திர அசல் ஆவணங்கள் பெறப்பட்ட நாள்.25.11..2021.
10) உத்தேச மனைப்பிரிவு சாலைகள், உள்ளாட்சி பொது உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திர ஆவண எண். 11548/2021 மற்றும் 11549/2021 நாள்-20.11.2021.

...2...

11) மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடுமின் உற்பத்தி மற்றும் பகிர்மானகழகம் அவர்களுக்கு TANGEDCO உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்ட ஆவண எண். 11547/2021 நாள்-20.11..2021.
12) அரசு கடிதம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை-09, அவர்களின் கடிதம் எண்.8449.நவ4(3)/2020-2, நாள்.-23.09.2020.
13) நகர் ஊரமைப்பு இயக்குநர்(மு.கூ.,பொ) சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-7671 2020/T(2),நாள்-25.09.2020.
14) அரசாணை எண்-181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் துறை, நாள்-09.12.2020.
15) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-19799/2020/போ நாள்-18.12.2020 மற்றும் 24.12.2020 மற்றும் 08.02.2021.

*******

<u>ஊத்தரவு</u>

பார்வை 1 -ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுலக கடிதம் நாள்.16.11.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 09-ல் **சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை** உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர ஆவணம் எணகள்: 11548/2021 மற்றும் 11549/2021 நாள்-20.11.2021- ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு <u>ம.வ/ம.உ.தி.கு.எண். 230/2021</u> என எண்ணிடப்பட்டு. தொழில்நுட்ப அனுமதியும், மேற்படி உத்தேசகுடியிருப்பு மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் பிரிவு 49-ன்கீழ் மற்றும் பார்வை(3)-ல் கண்ட அரசாணையின், விதி(4)-ன்படியும் <u>திட்ட அனுமதி எண்.254/2021</u> என எண்ணிடப்பட்டு. 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்:9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

...3...

சிறப்பு நிபந்தனை:

1. (a) பார்வை 14-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 3-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch. permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm drains water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 06 மற்றும் 07-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்படி சிறப்பு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு

1) அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்கள் - 2
   மனைப்பிரிவு நிபந்தனைகள் - 2
2) அசல் தானப்பத்திர ஆவணம் எண்.11548/2021 நாள்-20.11.2021.(10-தாள்கள்.)
3) அசல் தானப்பத்திர ஆவணர் எண்.11549/2021 நாள்-20.11.2021.(10-தாள்கள்.)

உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ).
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
மதுரை மாவட்டம்.

27/12/21

பெறுநர்

ஊராட்சி மன்றத் தலைவர்,
தனக்கன்குளம் ஊராட்சி,
திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம்,
மதுரை மாவட்டம்.

நகல்

1) திரு.M.அருண்குமார்
கத.எண் 2/276 திலகர் தெரு,
நாகமலை புதுக்கோட்டை
மதுரை 625 019.

} பத்தி ஒன்று மட்டும்

2) தமிழ்நாடு கட்டிட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம். (TNRERA)
1A. முதல் தளம்.காந்தி இர்வின் பிரிட்ஜ் சாலை,
எழும்பூர்.சென்னை -600008.

3) தொழில்நுட்பவைப்பறைக்கு -1 வரைபடம்
நிபந்தனைகள் -1

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத்துறை
மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி,
தனக்கன்குளம் ஊராட்சி,

கோப்பு எண்.3484/2021/மதி2. நாள். 27.12.2021

மனைப்பிரிவு ம.வ./ம.உ.தி.கு.எண்.230/2021

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையில் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மணையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விறகவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
4) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5) மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பி பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
6) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7) 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்களை எதிர்த்தாற்போல அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8) மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அதிகாரிகளால் தொடர்பு கொண்டு ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

9) அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10) மனுதாரர், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'X4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

11) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப் பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவின் ஒதுக்கீடு விபரம்

மதுரை மாவட்டம் - திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம்/வட்டம், தனக்கன்குளம் கிராமம் - சர்வே எண்.38/3A2B -ல்

| விவரம் | | பரப்பளவு விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 0.50ஏக்கர் (அ) 2024.00ச.மீ |
| ஒதுக்கிய மனைகள் | - | 07 எண்ணம் |
| பொது ஒதுக்கீடு<br>1.மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது. | | ---- |
| 2. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | - | 832.72 ச.மீ |
| 3. உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு | - | 12.0ச.மீ (1.0%) |
| 4. தமிழ்நாடு மின்உற்பத்தி (TANGEDCO) ஒதுக்கீடு | - | 12.0ச.மீ (1.0%) |

நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019-பிஏ2, நாள்-05.02.2020-ன்படி பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கான வழிகாட்டி மதிப்பீட்டு தொகையானது (ஒதுக்கீடு பரப்பு 130.0ச.மீ.-க்கு) 07.12.2021-அன்று மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

27/12/2021

34

30.2.22

திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் தனக்கன்குளம் ஊராட்சி மன்றத்தலைவர்/செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

**முன்னிலை திருமதி பா. ஆனந்தி பாண்டிமோகன்**

ந.க.எண் 3/2021-2022/தனக்கன்குளம் நாள்: 30.3.2022

**பொருள்:** குடியிருப்பு மனைப்பிரிவு–அனுமதி கோருதல் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் தனக்கன்குளம் ஊராட்சி தனக்கன்குளம் கிராமம் சர்வே எண்கள் 38/3a 2 b – ல் 0.50 ஏக்கர் (அ) 2024.00 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரை படத்திற்க்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கு உத்தரவிடல் தொடர்பாக.

**பார்வை:**

1. அரசானை எண் 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டம் (ந.தி-11) துறை நாள்: 4-2-2019
2. உறுப்பினர் செயலர்(பொ) மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் கடிதம் ந.க.எண்.3484/2021/மதி 2. நாள் 16-11-2021
3. தலைவர்/செயல் அலுவலர் தனக்கன்குளம் ஊராட்சி என்ற பெயருக்கான BOB Bank மதுரை பொன்மேனி கிளை வங்கி வரைவோலை எண் 048365 நாள்: 28-3-2022.
4. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் பொது உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானபத்திர ஆவண எண் 11548/2021 மற்றும் 11549/2021 நாள்: 20-11-2021

**உத்தரவு:**

பார்வை-2கானும் கடிதத்தில் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தனக்கன்குளம் ஊராட்சி தனக்கன்குளம் கிராமம் சர்வே எண்கள் 38/3a2b அமையும் 2024.00ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவு பார்வை – 1ல் கட்டிய அரசானையின்படி நடவடிக்கை மேற்கொண்டு குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு மதுரை உள்ளூர் திட்டகுழுமல் மூலம் மவ/ம.உ.தி.கு என 230/2021 என எண்ணிட்டு கீழ்கானும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

1. மனைப்பிரிவில் அமைந்துள்ள திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) பரப்பு 100ச.மீ (பூங்கா) மேற்கண்ட பூங்கா ஒதுக்கீடு பரப்பளவிற்கு அரசு வழிகாட்டி மதிப்பீட்டின்படி ஈடான தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

x Ang.

2. தலைவர்/செயல் அலுவலர் தனக்கன்குளம் ஊராட்சி பெயர்கான வங்கி வரைவோலை எண்களின் படி ரூ 81000 % (ரூபாய் எண்பத்தி ஓராயிரம் ரூபாய் மட்டும்) செலுத்தப்பட்டுள்ளது.
3. பார்வை 4ன் படி 12.00ச.மீ ஊராட்சிக்கு 12.00ச.மீ ஊராட்சிக்கு மற்றும் TANGEDCO உபயோகத்திற்காக 12.00 ச.மீ பத்திரப்பதிவு செய்து தரப்பட்டுள்ளது அவ்விடத்தில் சுற்றிலும் கல் ஊன்றி முழுவதும் முள்வேலி அமைத்து சம்பந்தப்பட்ட ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**நிபந்தனைகள்:**

1. மனைப்பிரிவின் சாலைகள் அனைத்தும் கொள்கையளவிலான மனைப்பிரிவு வரைபடத்தின்படி உள்ளாட்சி சட்டங்களின்படி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அபிவிருத்திக்க எடுத்துக்ககொள்ளப்படும். மேலும் பொதுப்பாதையிலிருந்து மனுதாரர் மனைப்பிரிவு அமையும் மனையிடம் வரை அணுகுசாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப்பகுதியை உள்ளாட்சி தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளும்.
2. மனைப்பிரிவு வரைபடத்தின் மனைப்பிரிவு சாலைகளையும் OSR ஒதுக்கீட இடங்கள் இருப்பின் அதனையும் மனைப்பரிவு வரைபடம் மற்றும் தானப்பத்திர நகலுடன் சம்பந்தப்பட் வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய்த்துறை ஆவணங்களின் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
3. இந்த அனுமதி மனைகளுக்கு மட்டுமே பொருந்தும். மனையில் அமையும் கட்டிடங்களுக்கு அனுமதியாகக் கருதப்பட மாட்டாது.
4. உள்ளூர் திட்டக்குழும அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.
5. நகர் ஊராமைப்பத்துறை கொள்கை அளவிலான (in principle) ஒப்புதல் அளிப்பதன் மூலம் வேறு யாரேனும் தனிநகர் உரிமை போரினால் இதனை முடிவு செய்ய ஊராட்சியோ ஊராட்சி ஒன்றியமோ பொருத்தமான அமைப்பு அல்ல.
6. சாலையின் இருபுறங்களிலும் 10 அடி துாரத்திற்கு ஒன்றாக மரம் நடப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.
7. மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் இவ்வுத்தரவு எப்பொழுது வேண்டுமானாலும் இரத்து செய்யப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்கட்பட்டு தனக்கன்குளம் ஊராட்சி தனக்கன்குளம் கிராமம் சர்வே எண்கள் 38/3a2b ல் அமையும் 2024.00 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைத்துள்ள 1 முதல் 7 வரையுள்ள மனைப்பிரிவில் உள்ள பிளாட் எண்களுக்கும் தனக்கன்குளம் ஊராட்சி மூலம் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி இதன்மூலம் உத்திரவிடப்பபடுகிறது.

P. Anuthi 30/3/2022

தலைவர்/செயல் அலுவலர்
தனக்கன்குளம் ஊராட்சி
திருப்பரங்குன்றஊராட்சி ஒன்றியம்

**பெறுநர்:**
திரு. M. அருண்குமார்
க.எண். 2/276 திலகர்தெரு
நாகமலைபுதுார் கோட்டை மதுரை - 19

தலைவர்
தனக்கன்குளம் ஊராட்சி
30/3/22



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate